## உள்ளாட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு பொறுப்பு வழங்கியவர் தளபதி மு.க.ஸ்டாலின்!

# மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500 எப்போது வழங்குவீங்க?

## சட்டப்பேரவையில் மடத்துக்குளம் இரா.ஜெயராமகிருஷ்ணன் பேச்சு!

**சென்னை, செப்.3 –**

**சட்டப்பேரவையில் மடத்துக்குளம் தொகுதி கழக உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் பேசுகையில், உள்ளாட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு பொறுப்பு வழங்கியவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும், மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500 எப்போது வழங்குவீர்கள் என்றும் பேசினார்.**

**சட்டப்பேரவையில் மடத்துக்குளம் இரா.ஜெயராமகிருஷ்ணன் பேசியதாவது:–**



பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் ஆகியோரின் திசையை நோக்கி வணங்குகிறேன். தமிழ்நாட்டில் ஒரே திட்டத்தில் 2 கோடியே 56 இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை உருவாக்கியவர்; இந்தியத் திருநாட்டுக்கே முதன்மை முதல்வராக விளங்கியவர், கழகத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பு அரண் தளபதி அவர்களை வணங்குகிறேன். அவரது வழியில் மக்கள் பணி, கழகப் பணி செவ்வனே ஆற்றிவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலாளர், எதற்கும் அஞ்சாதவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் 10 ஆண்டுகளாக ஊராட்சி மன்றத் தலைவராக, 5 ஆண்டுகளாக ஒன்றிய பெருந்தலைவராக, 3 முறை கழக சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு வாய்ப்பை வழங்கி நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா எ.வ.வேலு அவர்களுக்கும், வெற்றிக்குத் துணையாக இருந்த கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், மண்டலப் பொறுப்பாளர் அர.சக்கரபாணி அவர்களுக்கும், மாவட்ட கழக, ஒன்றிய கழக, நகர கழக, மாவட்டக் கழகத்தினுடைய பொறுப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி அவர்களுக்கும், தொகுதி மேற்பார்வையாளர் கோவை கரும்புக்கடை சாதிக் பாட்சா அவர்களுக்கும், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக, கிளைக் கழக BLA to BDA, BLC உள்ளிட்ட நிருவாகிகள், தோழமைக் கட்சியினுடைய நிருவாகிகள், எனது குடும்ப உறுப்பினர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்கள் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவிப்பதோடு, இந்த அவையில் இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பேரவைத் தலைவராகிய உங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்புகள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பல்வேறு கருத்துகளை எடுத்துவைப்பது கடமையென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

### கல்வியறிவு பெற்ற பெண்கள்!

ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பம் முன்னேறும்; கல்வியறிவு பெற்ற பெண்கள் அதிகரித்தால் ஒரு சமூகமே முன்னேறும் என்ற இலக்கோடு எங்கோ ஒரு கிராமத்தில் கூரையை விட்டு வெளிவராத பெண்களையும் பல்வேறு திட்டங்கள், சட்டங்களை கொண்டு வந்து அவர்களை கல்வியின்மூலம் பேருந்தில் ஏற்றி நகரத்திற்கு அரசு வேலைக்கும், IT கம்பெனிகளுக்கும் தைரியமாக வரவழைத்த இந்தியாவின் ஒரே தலைவர், சமூகநீதி காவலர் தலைவர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் நாயகர் அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த நாடே அறியும்.

கடந்த 1973–ஆம் ஆண்டு பெண்களைக் காவல் துறையில் பணியமர்த்தி பெண்களுக்குப் பெருமை சேர்த்த அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. 1989–ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1989–ஆம் ஆண்டு அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியவர் தலைவர் கலைஞர். அதைத் தொடர்ந்து 40 சதவிகிதமாக உயர்த்தியவர் அண்ணன் தளபதி அவர்கள். பெண்கள் பொருளாதாரத்தில் சொந்த கால்களில் நிற்க, 1989–ஆம் ஆண்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களை தருமபுரியில் தொடங்கி ஊக்கப்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு. 1989–ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்மூலம் பெண்களின் கல்வியை உயர்த்தியது தி.மு.க. அரசு. 1975–ஆம் ஆண்டு டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

1989–ஆம் ஆண்டு அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தைத் தந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். 1968–ஆம் ஆண்டு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி தந்தது தி.மு.க. அரசு. அதேபோன்று, கடந்த 1996––2001 உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். திருநங்கைகளின் கல்வி மற்றும் உரிமைகளுக்குப் புதிய வாய்ப்புகள்; மூன்றாம் பாலின மக்களைச் சமூகத்தில் அனைவரும் சமம் என்ற நோக்கத்தோடு 'அரவாணிகள்' என்ற சொல்லை, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 2006–ஆம் ஆண்டு திருநங்கை, திருநம்பி என்று பெயர் மாற்றம் செய்த ஆட்சி திமுக ஆட்சி. இந்தியாவிலேயே முதல் முறையாக 'திருநங்கையர் நல வாரியம்' 2008–ஆம் ஆண்டில் உருவாக்கியவர் சமூக நீதிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள். திருநங்கைகளுக்கு உயர் கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே முழுமையாக ஏற்று, திருநங்கையர் நல வாரியத்திற்கு ரூ.2 கோடி நிதியை வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

அதேபோன்று, 2021 முதல் 2026 வரையிலான ஆட்சியில் அண்ணன் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு மகளிருக்காகச் செய்யாத திட்டங்களே இல்லை என்றவகையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர் எங்களுடைய திராவிட மாடல் நாயகர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், மகளிர் விடியல் பயணத் திட்டம் 2021–ஆம் ஆண்டு தொடங்கி 2026–ஆம் ஆண்டு வரை 58.61 இலட்சம் பெண்கள் விடியல் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்கு ரூ.897.82 கோடி செலவாகியுள்ளது. பின்னர், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைமூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் 1 கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 பெண்களுக்கு வழங்கிய அரசு திராவிட மாடல் அரசு. பெண்கள் சுய உதவிக் குழு, தமிழ்நாட்டிலுள்ள சுமார் 4 லட்சத்து 86 ஆயிரத்து 656 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1 லட்சத்து 21 ஆயிரத்து 415 கோடி வங்கிக் கடன் இணைப்பு திராவிட மாடல் ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது. 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் உயர் கல்வித் திட்டத்தின்' மூலம் உயர் கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது; இதன்மூலம் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 728 மாணவிகள் பயனடைந்துள்ளனர். பணிக்குச் செல்லும் பெண்கள் தங்குவதற்கு 'தோழி விடுதிகள்' திட்டம் தந்தது திராவிட மாடல் அரசு; கடந்த ஐந்தாண்டுகளில் 19 விடுதிகள் கட்டப்பட்டு சுமார் 1,824 பெண்கள் அதனால் பயனடைந்து வருகின்றனர். 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்' இத்திட்டத்தின்கீழ் 34.40 இலட்சம் பெண்களுக்கு மொத்தம் ரூ.4,042 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, மிகச் சிறப்பான உன்னதமான திட்டம். 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'. இத்திட்டத்தின்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 15 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும்வகையில் இத்திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தைப் பார்த்து அண்டை மாநிலங்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் கனடா உள்ளிட்ட நாடுகளில்கூட இத்திட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வரவு செலவுத் திட்ட உரையில் தமிழ்நாட்டின் பெண்கள் அனைவரையும் தன் குடும்பத்தில் ஒருவராகக் கருதும் முதலமைச்சர் அவர்கள், அப்பெண்களின் திருமண நாளில் அரசின் சார்பாக 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ஒரு பட்டுப் புடவை அண்ணனின் சீராக வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு 812 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நான் இந்த அரசைக் கேட்க விரும்புவது என்னவென்றால், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம், கலைஞர் அவர்களால் 1989–90 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டபோது பெண்களின் கல்விதான் இலக்காக இருந்தது. அதனால் ஐந்தாம் வகுப்பு படிப்பை நிறுத்திய பெண்கள், எட்டாம் வகுப்பு வரை படித்தனர். படிப்படியாகக் கல்வித் தகுதி உயர்த்தப்பட்டு, தாலிக்கு தங்கம் மற்றும் பட்டதாரி பெண்களுக்குக் கூடுதல் உதவித் தொகை என்று அந்தத் திட்டம் மாறியது. இதனால் பல பெண்கள் கல்லூரிப் படிப்பை முடித்தனர். அண்ணன் சீர் திட்டத்திற்கு உங்கள் தேர்தல் அறிக்கை மற்றும் வரவு செலவுத் திட்டம் இரண்டிலும், நீங்கள் பெண்களின் கல்வித் தகுதியைக் குறிப்பிடவில்லை. அப்படியென்றால், நீங்கள் இந்த திட்டம்மூலம் எந்தவிதமான சமூக முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள் என்று குறிப்பிட வேண்டும்.

### தாலிக்குத் தங்கம் நிதி ஒதுக்கீடு குறைவு!

2020––21 ஆண்டு வரை 'தாலிக்கு தங்கம்' திட்டத்தில் பயன்பெற்ற குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000–ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது, தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ரூ.3.62 இலட்சமாக உள்ளது. ஆனால், உங்கள் தேர்தல் அறிக்கையில் அண்ணன் சீர் திட்டம், ஆண்டுக்கு ஐந்து லட்சத்திற்கும் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுமென்று குறிப்பிட்டு இருந்தீர்கள். அப்படியென்றால் இத்திட்டத்திற்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பவர்கள், 2020––21–ஆம் ஆண்டில் தாலிக்கு தங்கம் திட்டத்திற்கு 1.5 இலட்சம் விண்ணப்பங்கள் வந்தது என்றால், அண்ணன் சீர் திட்டத்திற்கு 3 இலட்சம் விண்ணப்பங்கள்கூட வரலாம். ஆனால், ஒதுக்கப்பட்ட நிதி வெறும் ரூ.812 கோடி மட்டுமே. எதன் அடிப்படையில் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்படும் என்றும், ஒரு சவரன் தங்கம் இன்றைக்கு ரூ.1.19 இலட்சம் என்ற நிலையில், ஒரு பட்டுப் புடவை குறைந்த பட்சம் ஐந்தாயிரம் என்று எடுத்துக்கொண்டால், ஒரு பெண்ணுக்கு ரூ.1.24 இலட்சம் செலவாகும்.

அதாவது, 1 இலட்சம் பெண்களுக்கு இந்தத் திட்டத்தை வழங்கினாலும்கூட 1,244 கோடி ரூபாய் செலவாகும். ஒதுக்கப்பட்ட நிதியில் 432 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது. இந்நிலையில் த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிப்படி, இந்தத் திட்டம், ஆண்டு வருமானம் குறைந்து 5 இலட்சம் ரூபாய் உள்ள குடும்பங்களுக்கு என்றால், சுமார் 3 இலட்சம் பெண்கள் இதில் பயன்பெறுவார்கள் என்ற உத்தேசித்தால்கூட 3,733 கோடி ரூபாய் தேவைப்படும். அப்போது ஒதுக்கிய நிதி போதாமல், backlog சேரும். அதை எப்படி சமாளிப்பீர்கள்? அதேபோல், தங்கத்தின் விலை அதிகரித்தால், நிதி ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்படுமா?

### மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500 எப்போது?

மேலும் இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது; தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வால் ஒவ்வொரு குடும்பத் தலைவியும் குடும்ப பட்ஜெட்டை சமாளிக்க முடியாமல் தவித்து வருகின்றனர். தற்போதைய சூழலில் விலைவாசி கட்டுக்குள் வருவதற்கான சூழல் இல்லாதது போல தெரிகிறது. ஆகவே, வாக்குறுதியளித்தபடி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுமா? தி.மு.க. ஆட்சிக்கு வந்திருந்தால், இன்றைக்கு நாங்கள் ரூ.2,000/–ஐ நிச்சயமாக வழங்கியிருப்போம். நீங்கள் ரூ.2,500/– வழங்குவீர்கள் என நம்பித்தான் உங்களுக்கு வாக்களித்தார்கள். அப்படியானால், நீங்கள் எப்போது ரூ.2,500/–ஐ வழங்குவீர்கள்?

தலைவர் தளபதியார் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த காலத்தில் பெண்களுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்காக HPV தடுப்பூசி 9 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுமியருக்கு செலுத்தப்பட்டது. அதற்கு, 36 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, குறிப்பிட்ட சில மாவட்டங்களில் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் அவர்கள். அத்திட்டத்தைப் பற்றிய எந்த அறிவிப்பும் இந்த அறிவிப்புகளில் வெளியிடப்படவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

தமிழ்நாட்டில் ஐந்தாவது முறை முதல மைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் ஆட்சியில் 'ஊனம்' என்ற சொல் ஒருவரின் இயலாமையை மட்டுமே குறிப்பதால், அவர்களிடமுள்ள மாற்றுத் திறன்களை வெளிக்கொண்டு வர வேண்டும்; அவர்களின் கண்ணியத்தையும் உரிமையையும் உயர்த்த வேண்டுமென்ற நோக்கில், மாற்றுத் திறனாளிகள் என்று அவர்களுக்கு பெயர் சூட்டிய தலைவர் கலைஞர் அவர்கள், 2007 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு நல வாரியம் கொண்டு வந்து, 2010 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறையாக மாற்றியவர் செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள். அதைத் தொடர்ந்து கழகத்தின் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசில், பல்வேறு நலத் துறைகளுடன், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையையும் முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் தொடர்ந்து வைத்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்!

திராவிட மாடல் அரசில் அவர்களது பராமரிப்பு உதவித் தொகை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–ஆக உயர்த்தப்பட்டது. உங்கள் தேர்தல் அறிக்கையில் அது ரூ.3,000/–ஆக உயர்த்தப்படும் என்று அறிவித்தீர்கள். அதை எப்போது வழங்குவீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலமாக பல்வேறு சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் மாற்றுத் திறனாளி உரிமைகள் திட்டம் (TN RIGHTS project) மூலமாக 6 ஆண்டுகளில் 1,774 கோடி ரூபாய் மதிப்பில் தடையற்ற கட்டமைப்பு, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, இத்திட்டத்தைக் கொண்டு வந்தவர் அண்ணன் தளபதியார் அவர்கள்.

அதேபோல, விழுதுகள் (One stop social care centres). மாற்றுத் திறனாளிகள் பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்று வர வேண்டிய நிலையை மாற்றி, ஒரேயிடத்தில் பல்வேறு சமூகப் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளைப் பெறும் வகையில், 39 இடங்களில் இத்திட்டத்தைக் கொண்டு வந்தது திராவிட மாடல் ஆட்சி. திராவிட மாடல் அரசின் நான் முதல்வன் திட்டத்தின்மூலம் 500 மாற்றுத் திறனாளி பட்டதாரிகளுக்கு பொருத்தமான சாஃப்ட்வேருடன் மடிக்கணினி வழங்கப்பட்டதும் திராவிட மாடல் ஆட்சியில் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

### தாயுமானவர் திட்டம்!

அதேபோல, தாயுமானவர் திட்டத்தின் மூலமாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டோர் நியாய விலைக் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்க முடியாத நிலையை மாற்றி, அவர்களின் இல்லத்திற்கே பொருட்களைக் கொண்டு சேர்த்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. இதன்மூலம் சுமார் 16 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்து கொண்டுள்ளனர்.

பார்வையற்ற மாணவர்களுக்கு வாசிப்பாளர்களாக இருக்கும் உதவியாளர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தியதும் தளபது அவர்களுடைய அரசு.

அதேபோன்று, சிறப்பு மேன்மை மையம் (Centre of Excellence for Persons with Autism Spectrum Disorder). சென்னை கே.கே. நகர் அரசு மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மருத்துவமனை வளாகத்தில் இத்திட்டத்தை 25 கோடி ரூபாய் மதிப்பில் கொண்டு வந்தவர் அண்ணன் தளபதியார் அவர்கள். ஆட்டிசம் குறைபாடு கொண்ட ஒவ்வொரு குழந்தைக்கும் சிறப்புக் கல்வி, கண் பார்வை அளவீடு, கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சி, இயன்முறை சிகிச்சை, செயல்முறை சிகிச்சை, உளவியல் சேவை வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பு.

### உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள்!

கடந்த ஆட்சிக் காலத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் நியமன உறுப்பினர்களாக மாற்றுத் திறனாளிகளுக்கு பொறுப்புகளை வழங்கியவர் அண்ணன் தளபதி என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்வதில் பெருமைகொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று, மழை மற்றும் வெள்ள பாதிப்பு ஏற்படும் நேரங்களில் மாற்றுத் திறனாளிகள் அலுவலங்கள் சென்றுவர வாகனங்களில் ஏறி, இறங்க மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். எனவே, அனைத்து மாற்றுத் திறனாளி அரசு ஊழியர்களுக்கு 12 நாள் CL உடன் 15 நாள் சிறப்பு விடுப்பு மொத்தமாக 27 நாட்கள் தற்செயல் விடுப்பாக மாற்றி வழங்கிட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, மாற்றுத் திறனாளிகள் அரசுப் பணியாளர்களாக ஓய்வு வயதை 65 வயதாக உயர்த்த இந்த அரசு முன்வருமா என்பதையும், அதேபோன்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக வீடுகளைத் தரைதளத்தில் ஒதுக்கீடு செய்ய இந்த அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: தமிழ்நாட்டில் 2021ஆம் ஆண்டு அண்ணன் தளபதியார் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றபோது சுமார் 5,329 டாஸ்மாக் சில்லறை மதுபானக் கடைகள் இயங்கி வந்தன.

தேர்தல் வாக்குறுதிப்படி படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் 500 டாஸ்மாக் கடைகள் ஒரே நேரத்தில் நிரந்தரமாக மூடப்பட்டன. மூடப்பட்ட கடைகள் தவிர, எஞ்சியுள்ள கடைகளின் எண்ணிக்கை 4,765 ஆகும்.

கடந்த திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில், மாநிலத்தில் போதைப்பொருட்களின் பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலைக் கட்டுப்படுத்த பல சட்டப்பூர்வ மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் முக்கியமானவை–போதையில்லா தமிழ்நாடு இயக்கம்–Drug Free Tamil Nadu campaign 2022 ஆம் ஆண்டு "போதையில்லா தமிழ்நாடு என்ற விழிப்பணர்வு இயக்கம் தொடங்கப்பட்டது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இலட்சக்கணக்கான மாணவர்கள் போதைப்பொருளுக்கு எதிராக உறுதிமொழி ஏற்கும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. சிறப்பு அமலாக்கப் பிரிவு உருவாக்கப்பட்டது. போதைப் பொருள் தடுப்புப் பிரிவான NIB மற்றும் மது விலக்கு அமலாக்கப் பிரிவை (PEW) ஒன்றிணைத்து Enforcement Bureau–CID என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, போதைப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் கடத்தல்காரர்களின் வங்கி கணக்குகள் மற்றும் சொத்துக்கள் முடக்கப்பட்டன.

### போதைப்பொருள் கடத்தல் குண்டர் சட்டம்!

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கஞ்சா மற்றும் பிற போதைப்பொருட்களை மாநில எல்லை வழியாகக் கடத்தி வருவதைத் தடுக்க அண்டை மாநில அதிகாரிகளுடன் இணைந்து கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டது. அதேபோன்று, பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களின் போதைப்பொருட்களைத் தடுக்கும்வண்ணம் 'போதை எதிர்ப்பு மன்றங்கள்'–Anti–drug club மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் அமைக்கப்பட்டன என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அதேபோன்று, கடந்த ஆட்சிக் காலத்தில் மது விற்பனை என்பது ஆண்டுக்கு 45 ஆயிரம் கோடி ரூபாய் என்று average ஆக இருந்தது. ஆனால், த.வெ.க. ஆட்சியின் முதல் 100 நாட்களில் கிடைத்த வருமானம் சுமார் ரூ.11,000 கோடி முதல் ரூ.12,000 கோடி வரை என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, த.வெ.க. ஆட்சியில் தற்போது 717 மதுக்கடைகள் மூடப்பட்டள்ளதாக அறிவித்துள்ளீர்கள். ஆனால், மது விற்பனை மூலம் வருவாய் குறையவில்லை. விற்பனை குறையாதபோது வருமானத்திற்காக ஏதேனும் புதிய செயல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளீர்களா என்பதை அவையில் உங்களைக் கேட்க விரும்புகின்றேன்.

மடத்துக்குளம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை 1960–ஆம் ஆண்டு அரவை துவங்கப்பட்டது. திண்டுக்கல், திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ள ஆலை, பழமையான இயந்திரங்களால் 2023 ஜூலை மாதம் முதல் இயங்காமல் உள்ளது. இங்குள்ள எரிசாராய உற்பத்தி ஆலை மட்டும் பிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து மூலப்பொருட்களைக் கொண்டு வந்து spirit மற்றும் ethanol தயாரிக்கும் பணிகள் மட்டும் நடைபெற்று வருகிறது. இந்த ஆலையை நம்பி நேரடியாகவும், மறைமுகமாகவும் 10 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றனர். பழமைவாய்ந்த இயந்திரத்தை சீரமைக்கும் பொருட்டு, முன்னாள் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் 2025 செப்டம்பர் 9–ஆம் தேதி 11 பேர் கொண்ட வல்லுநர் குழுவை அமைத்தார்கள். வல்லுநர் குழு ஆலையை புனரமைப்பு செய்து மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து விரிவான திட்ட அறிக்கையில்.

இவ்வாறு இரா.ஜெயராம கிருஷ்ணன் பேசினார்.

---

## ஈரோடு மேற்கு மாவட்டம் – பெரிய கொடிவேரி

# பேரூர் கழகச் செயலாளர் ஏ.ஆறுமுகம் மறைவு!

## என்.நல்லசிவம் – கழகத்தினர் அஞ்சலி!

*ஈரோடு, செப். 3 -*

ஈரோடு மேற்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி, டி.என்.பாளையம் தெற்கு ஒன்றியம், பெரியகொடிவேரி பேரூர் கழக செயலாளர் ஏ.ஆறுமுகம் (வயது 54) அவர்கள் 01.09.2026 - செவ்வாய்க்கிழமை அன்று இரவு மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார்.

இவர் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். இவருக்கு திருமணம் ஆகவில்லை.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் மற்றும் கழகத்தினர் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

---

## ஈரோடு மேற்கு மாவட்டம் – பெரிய கொடிவேரி

# பேரூர் கழகச் செயலாளர் ஏ.ஆறுமுகம் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

ஈரோடு, செப். 3 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

ஈரோடு மேற்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி, டி.என்.பாளையம் தெற்கு ஒன்றியம், பெரியகொடிவேரி பேரூர் கழக செயலாளர் ஏ.ஆறுமுகம் (வயது 54) அவர்கள் 01.09.2026 -செவ்வாய்க்கிழமை அன்று இரவு மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்னாரை இழுந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் .

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரெ. கணேசன்

**செப்டம்பர் 3 (2001)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே தனது மாணவ நண்பர்களுடன் இணைந்து மன்னார்குடி பகுதியில் திராவிட மாணவர் கழகத்தை உருவாக்கியவர்.**

**மன்னார்குடி வட்ட அவைத்தலைவராகவும், மன்னை நகரச் செயலாளராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.**

**மன்னார்குடி நகர வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**